11th February 1958]

செய்து சில சமயங்களில் இம்மாதிரி கைதிகளாக இருந்தவர்கள் விடுதலை செய்யப்பட்டும் இருக்கிறார்கள். ஆனால் ஏதோ அரசியல் நோக்கத்திற்காக கொலை செய்தவர்கள் என்பதற்காக அவர்களை தண்டனையைக் குறைத்துவிட்டு விடுதலை செய்வது சரி அல்ல என்பது சர்க்காரின் எண்ணம்.

SRI K. ANBAZHAGAN : கனம் தலைவர் அவர்களே, கொலைக் குற்றம் இல்லாமல், வேறு அரசியல் காரணங்களுக்காக தண்டிக்கப்பட்டவர்களில் மிகப் பெரிய தலைவரான பெரியார் அவர்களை விடுதலை செய்ய ஏதேனும் திட்டம் உண்டா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதற்கும் இந்தக் கேள்விக்கும் சம்பந்தமில்லை அதனால் அதற்கு இப்பொழுது பதில் சொல்லவில்லை.

SRI V. K. KOTHANDARAMAN : அமைச்சர் அவர்கள் சொன்னது போல ஜன்ம தண்டனை கொடுக்கப்பட்ட சில கைதிகளை ஆந்திராவிலே சமீபத்தில் விடுதலை செய்திருக்கிறார்கள். அதே போன்று நமது சர்க்காரும் புனராலோசனை செய்து ஜன்ம தண்டனை அடைந்த கைதிகளை விடுதலை செய்வதற்கு முன் வருவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : சென்னை சர்க்காரும் சில கைதிகளை விடுதலை செய்திருக்கிறார்கள். ஆனால் ஒவ்வொரு கேஸும் பரிசீலனை செய்யப்பட்டு அதன் பிரகாரம் முடிவு செய்யப்படுகிறது.

Betel vines.

* 40 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether any research has been conducted to eradicate the diseases affecting betel vines; and

(*b*) if so, the results thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) Earlier trials to control the wilt disease of betel vine indicated that drenching the soil frequently and periodically with Bordeaux mixture controlled the disease. But this method is not popular with the ryots as it is costly and laborious. Hence further research is being conducted under a Second Five-Year Plan Scheme to evolve a cheaper and less laborious method to control the disease. The experiments are still in progress and no definite conclusions have yet been arrived at.

SRI N. K. PALANISAMI : கிட்டதட்ட இரண்டு, மூன்று வருஷங்களாக 'ரிஸெர்ச்' நடந்துகொண்டு வருகிறது. ஆகவே, சர்க்கார் உடனடியாக ஏதாவது ஏற்கனவே 'ரிஸெர்ச்' செய்து வெற்றி அடைந்த சில முறைகளை வெற்றிலை கொடிக்கால்களில் கையாள்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : என்னென்ன முறைகள் இப்பொழுது கையாளப்படலாமோ அவைகள் எல்லாம் கவனிக்கப்பட்டு வருகிறது. ஆனால், ஆராய்ச்சியில் அவசரப்படுத்தியும் பயன் இல்லை.

SRI M. P. SUBRAMANIAM : சேலம், நாமக்கல் வட்டாரத்தில் ஒரு பண்ணையை ஏற்படுத்தி ஆராய்ச்சி செய்தது உண்மைதானா ? கடந்த இரண்டு ஆண்டுகளில் அதன் அனுபவம் என்ன ? அதை விவசாயிகள் விரும்பாததும், அதனால் பயன் இல்லை என்பதும் உண்மைதானா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அது உண்மை தான். அங்கே ஒரு வெற்றிலை தோட்டம் ஏற்படுத்தி பல விஷயங்களை ஆராய்ச்சி செய்து கொண்டு வருகிறார்கள். அந்த ஆராய்ச்சி டிசம்பர் 1956-ல் தொடங்கப்பட்டது. ஆனால் தோட்டம் ஏப்ரல் 1957-ல் தான் அமைக்கப்பட்டது. அது முதல்கொண்டு பல பரிசீலனைகள் அங்கே செய்யப்பட்டு வருகிறது. இன்னும் முடிவுகள் சொல்லக்கூடிய நிலை ஏற்படவில்லை.